**KALANJIYAM – International Journal of Tamil Studies**
e-ISSN 2456-5148 · p-ISSN 2456-5148
Department of Library Nallamuthu Gounder Mahalingam College · ngmtamil.in

திறந்த அணுகல்
Vol. 6 No. 01 (2026)
பக். 413–420
DOI: 10.63300/kijts10sp02.2026.23

ARTICLES

# ஒப்பியல் நோக்கில் ஜே. ஜே: சில குறிப்புகள், சம்ஸ்காரா நாவல்களில் இருத்தலியல் கூறுகள்

## A Comparative Study: Existential Elements in J. J. Sila Kurippugal and Samskara

**அரவிந் கோ**[1,*] , **முனைவர்கு. பத்மநாபன்**[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), பதிவு எண்:2025PHDFTTM02, தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரப் பிரதேசம் - 517 426.

[2] இணைப் பேராசிரியர், தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரப் பிரதேசம் - 517 426.

* **தொடர்பு ஆசிரியர்:** அரவிந் கோ, aalvinaiyon@gmail.com

**ORCID iD:** அரவிந் கோ https://orcid.org/0009-0008-2141-9691

**கட்டுரைத் தகவல்**

**கட்டுரை வரலாறு**
பெறப்பட்டது: 2 ஏப்ரல் 2026
திருத்தப்பட்டது: 10 ஏப்ரல் 2026
ஏற்கப்பட்டது: 15 ஏப்ரல் 2026

**கட்டுரை எண்**
MS-2026-0004

**சக மதிப்பாய்வு**
Double-blind peer review

**திறவுச் சொற்கள்**
ஒப்பியல்
இருத்தலியம்
நவீனத்துவம்
ழான் – பவுல் சார்த்தர்
சுந்தர ராமசாமி
யு.ஆர். அனந்தமூர்த்தி

**ஆய்வுச் சுருக்கம்**

நவீனத்துவத்தின் தத்துவப் பின்னணியாக இருத்தலியம் விளங்குகிறது. தமிழ் மற்றும் கன்னட நவீனத்துவ நாவல்களான ஜே.ஜே: சில குறிப்புகள் மற்றும் சம்ஸ்காராவில் இருத்தலியல் கூறுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவ்விரண்டு நாவல்களிலும் தனிமனித முக்கியத்துவம், தேர்ந்தெடுத்தலில் சுதந்திரம், பொறுப்புணர்வு, முடிவெடுத்தலில் சிரமம், போலிச் சுதந்திரம், மற்றவர்கள்தான் நரகம், கடவுள் மறுப்பு, எல்லைக்கோட்டுநிலை ஆகிய இருத்தலியல் கூறுகள் ஒத்துக்காணப்படுகின்றன. இந்த இருத்தலியத்தின் கூறுகள், எவ்வளவில் பொருந்துகின்றன என்பதையும், இவ்விரு நாவல்கள் எவ்வாறு நவீனத்துவ நாவல்களாக நிலைபெற்றிருக்கின்றன என்பதையும், நவீனத்துவ நாவல்களிலுள்ள இருத்தலியல் கூறுகளின் இன்றியமையாமையையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**இக்கட்டுரையை மேற்கோள் காட்ட:** அரவிந் கோ, & கு. பத்மநாபன் (2026). ஒப்பியல் நோக்கில் ஜே. ஜே: சில குறிப்புகள், சம்ஸ்காரா நாவல்களில் இருத்தலியல் கூறுகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *1*(02), 413–420. https://doi.org/10.63300/kijts10sp02.2026.23

**பதிப்புரிமையும் உரிமமும்:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

**முன்னுரை**

இரண்டாம் உலகப்போரின் விளைவாகக் கலை, இலக்கியத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் நவீனத்துவம் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. இந்தியாவில் விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதாரச் சூழல்களின் விளைவாக நவீனத்துவம் என்ற கலை இலக்கியக் கொள்கை நிலைபெறத் தொடங்கியது. குறிப்பாக,1960 – 1970 களின் அரசியல் சூழல் இந்தியாவில் இருத்தலியம் வளர்ச்சியடைய மறைமுகமாகத் துணைபுரிந்தது. இவ்வாறு, இந்தியாவின் முதன்மை மொழிகளில் நிலைபெற்ற நவீனத்துவ இலக்கியக் கொள்கை தமிழிலும் பரவத் தொடங்கியது. அசோகமித்திரன், ஜி. நாகராஜன், சுந்தர ராமசாமி முதலியோர் நவீனத்துவக் கொள்கையைப் பின்பற்றினர். இவர்களுள் ஒருவரான சுந்தர ராமசாமி படைத்த ஜே.ஜே: சில குறிப்புகள் அந்நாள்வரை மரபாக பின்பற்றப்பட்டு வந்த நாவல் வடிவத்திலிருந்து முற்றிலுமாக மாறுபட்ட புதிய உருவ-உள்ளடக்கத்தைக் கொண்ட தமிழ் நவீனத்துவ நாவல்களுள் முன் வரிசையில் வைத்து நோக்கத்தக்கது. மேலைநாட்டில் தோன்றி வளர்ந்த நவீனத்துவத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்தியதிலும் வளர்த்தெடுத்ததிலும் மிக முக்கியப் பங்காற்றியவர் கன்னட எழுத்தாளரான யு.ஆர். அனந்தமூர்த்தி. இவருடைய முதல் நாவலான சம்ஸ்காரா அந்நாள்வரை நிலவிவந்த பண்பாட்டு மரபுகளின் உடைப்பை வெளிப்படையாக எடுத்துக்காட்டி இலக்கிய உலகில் மிகப்பெரிய அதிர்வை ஏற்படுத்திய ஒரு முழு நவீனத்துவ நாவலாகும். தமிழ் மற்றும் கன்னடத்தின் முதன்மை நவீனத்துவ நாவல்களான ஜே.ஜே: சில குறிப்புகளிலும் சம்ஸ்காராவிலும் இருத்தலியல் கூறுகள் நிறைந்து காணப்படுகின்றன. இந்தக் கூறுகள் இரண்டு நாவல்களிலும் ஒத்திருக்கக் கூடியவைகளாகவும் உள்ளன. அந்தக் கூறுகளை ஒப்பிட்டு நோக்குவதன் வாயிலாகத் தமிழ்க் கன்னட நவீனத்துவ நாவல்களில் இருத்தலியத்தின் முக்கியத்துவத்தை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

மி ஆல்ள் முக்கியமா ர**இருத்தலியம்**

உலகப்போர்களுக்கு முன்புவரை அறிவியலும் தொழில்நுட்பமும் மனிதக் குலத்திற்கு நன்மையை மட்டுமே பயக்கும் என நம்பிக் கொண்டிருந்தபோது, அதே அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களால் உருவாக்கப்பட்ட நவீனக் கண்டுபிடிப்புகள் மனித உயிர்களை அழித்தொழிக்கவும் பயன்பட்டது. இதனால், மனிதன் அறிவியல், தொழில்நுட்பம், அரசாங்கம், சட்டம், கடவுள், தத்துவம் முதலியவற்றின் மீதும் சகமனிதன் மீதும் கொண்டிருந்த நம்பிக்கைகளை இழந்து எதன்மீதும் நம்பிக்கையற்றுப் போகிறான். இவ்வாறு அர்த்தமற்ற வாழ்வில் தனித்துவிடப்பட்டு சூன்யத்தில் நின்ற மனிதனுக்கு நம்பிக்கையூட்ட தோன்றிய தனிமனிதத் தத்துவமே இருத்தலியம்.

மனித வாழ்வு என்பது அபத்தமானது அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. மனிதன் தன் வாழ்வுக்கான அர்த்தத்தை, தானாகவே பிறப்பு முதல் இறப்புவரையிலானத் தன்னுடைய இருப்புக்காலத்தில் தேடிக்கொள்ள வேண்டும் எனக்கூறும் இருத்தலியம், அத்தகைய அபத்த வாழ்விற்கு அர்த்தமூட்டுவதற்கான வழிமுறைகளையும் முன்வைக்கிறது.

**இருத்தலியல் கூறுகள்**

இருத்தலியலில் ஆத்திக இருத்தலியம், நாத்திக இருத்தலியம் என இரண்டு பிரிவுகள் உள்ளன. சோரன் கீர்க்கிகார்ட், கார்ல் ஜாஸ்பர்ஸ் முதலிய ஆத்திக இருத்தலியர்களும்; பிரெடரிக் நீட்சே, ஹைடெகர், ழான் பவுல் சார்த்தர், ஆல்பெர் காம்யு முதலிய நாத்திக இருத்தலியர்களும் வாழ்விற்கு அர்த்தமூட்டுவதற்கான பல வழிமுறைகளை முன்வைத்துள்ளனர். இவர்கள் முன்வைக்கும் வழிமுறைகளுக்கிடையில் வேறுபாடுகள் இருப்பினும் அனைவருக்கும் பொதுமையான கருத்துகளும் உள்ளன. இவ்வாறு பொதுவானவையாக உள்ள இருத்தலியல் கூறுகள் ஜே.ஜே: சில குறிப்புகள் மற்றும் சம்ஸ்காரா நாவல்களில் காணப்படுகின்றன.

**தனிமனித முக்கியத்துவம்**

இருத்தலியம், மனிதன் மற்றவர்களோடு இணைந்து கூட்டாக செயல்படும் கும்பல் கலாச்சாரத்தை எதிர்க்கிறது. கும்பல் கலாச்சாரத்தில் தனிமனிதனுக்கான முக்கியத்துவமோ அடையாளமோ கிடைக்கப்பெறாது என்பதால், சமூகத்தில் ஒருவனாக இருப்பதைவிட்டு நீங்கித் தனியாகவே இருக்க வேண்டும் என்கிறது. எவர் ஒருவருக்காகவும் தன்னுடைய உரிமைகளையும் தனிப்பட்ட விருப்பங்களையும் மாற்றிக் கொள்ளாமல், தன்னிலைக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கிக்கொள்ள வேண்டும் என்ற தனிமனித முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகின்றது. இருத்தலியத்தின் தந்தை என அழைக்கப்படும் சோரன் கீர்க்கிகார்ட் "தன் கல்லறையில் ஒரு சொல் எழுதவேண்டும் என்றால் நான் தனிமனிதன் என்கின்ற சொல்லையே தேர்ந்தெடுப்பேன் என்கிறார்" (தமிழ்ப் புதினங்களில் இருத்தலியல், பக். 73) அவருடைய இக்கூற்றின் மூலமாகத் தனிமனித முக்கியத்துவத்தை நன்கு விளங்கிக்கொள்ள முடிகிறது.

ஜே.ஜே: சில குறிப்புகளின் முதன்மைப் பாத்திரமான ஜே.ஜே-வும் அவரது ஆசிரியர் அரவிந்தாட்ச மேனனும் பேசிக்கொண்டிருக்கும்போது, முல்லைக்கல் மாதவன் நாயர் "அவன் எதைத் தொட்டாலும் அது சிடுக்காகி விடும். சரியான தனிநபர்வாதி அவன்."(ஜே.ஜே: சில குறிப்புகள், பக். 95 ) என்று கூறுவதன் மூலமும், "இந்த தேசத்திலுள்ள பிரச்சனைகள், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பிச்சைக்காரர்களின் அவதி இவைபற்றியெல்லாம் கவலை கிடையாது. உங்களுடைய கவலை உங்களைப் பற்றித்தான்." (மேலது, பக். 97) என்று கூறுவதனாலும் ஜே.ஜே சமூகத்திலிருந்து விலகிய ஒரு தனிநபர்வாதியகாவே இருக்கிறார் என்பதை அறியமுடிகிறது. இவை ஜே.ஜே-வைப் பற்றிய முல்லைக்கல் மாதவன் நாயர் போன்ற

முற்போக்குவாதிகளின் பார்வையே எனக்கொண்டாலும், ஜே.ஜே. தன்னுடைய நாட்குறிப்பில் "குடும்பத்தோடு இணையவே முடியவில்லை. ஒவ்வொரு நிமிடமும் துன்பமாக இருக்கிறது. எச்சில் இலைகளுக்கு அடித்துக்கொள்ளும் நாய்களைத்தான் குடும்பத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஈனப் புத்திகள் பல்லைக் காட்டுகின்றன. நாகரிகம், இங்கிதம், தளுக்கு, உபசாரம், அன்பு, ஆதரவு, அனைத்தும் போலி. வெறும் பொய். உள்ளே வெறும் பொக்கு. அனைத்தும் கலகலத்துக்கொண்டிருக்கின்றன. குடும்பம் என்ற நாடக கோஷ்டியிடம் ஒரு பெரிய படுதா மட்டும் மிஞ்சியிருக்கிறது"(மேலது, பக். 175) என்று குறிப்பிட்டிருப்பதன் வாயிலாகவும், குடும்பம் என்னும் கும்பல் கலாச்சாரத்தில் வெறுப்புக்கொண்டு, கூட்டு வாழ்விலிருந்து விலகித் தன் விருப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தனிமனிதனாக இருப்பதை ஜே.ஜே-வே உறுதிப்படுத்துகிறான்.

"பாதைகள் என்று எதுவுமில்லை. உன் காலடிச் சுவடே உன் பாதையை உருவாக்குகிறது"(மேலது, பக். 51) என்று ஜே.ஜே கூறுவதன் மூலம், இருத்தலியம் முன்வைக்கும் தனிமனிதனாகவும் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை விடுத்துத் தன்னுடைய விருப்பங்களையும் சுதந்திரத்தையும் நாடுபவனாகவும் இருக்கிறான் என்பதை அறியமுடிகிறது. அதேபோல, சம்ஸ்காராவில், நாராணப்பா தன்னுடைய விருப்பங்களுக்காக யாரையும், எந்த ஒன்றையும் பொருட்படுத்தாமல், பிராமணியத்தின் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் மீறி, ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சந்திரியோடு இணைந்து வாழ்கிறான். அவளை அக்ரஹாரத்திற்கே அழைத்து வந்து தன்னுடைய வீட்டில் தன்னுடனேயே தங்கவைத்தும் கொள்கிறான். அதுமட்டுமன்றி, மாமிசமும் மாட்டிறைச்சியும் உண்கின்றான். கிராப் வெட்டிக்கொள்கிறான், கடவுளை இகழ்கிறான், இஸ்லாமியர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு கோயில் குளத்தில் மீன் பிடிக்கின்றான். இவ்வாறு தன் விருப்பத்திற்கேற்ப சுதந்திரத்துடன் செயல்படும் மனிதராகக் காட்டப்படுகிறான்.

தனது விருப்பத்திற்கும் சுதந்திரத்திற்கும் தடையாக உள்ள குடும்பம், சமூகம் என அனைத்தையும் எதிர்க்கும் ஜே.ஜே-வும்; பிராமண நம்பிக்கைகள், கட்டுப்பாடுகள், மரபுகள் போன்ற அனைத்தையும் மீறுவதன்மூலம் நாராணப்பாவும் தனிமனிதத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் தனிநபர்வாதிகளாகவே திகழ்கின்றனர்.

**தேர்ந்தெடுத்தலில் சுதந்திரம்**

தனிமனிதன் தன்னுடயை இருப்பு காலத்தில் தனக்கு முன் இருக்கக்கூடிய வாய்ப்புகளில், தான் விரும்பியதைச் சுதந்திரமாகத் தானே தேர்வுசெய்ய வேண்டும். அவ்வாறு, தேர்ந்தெடுப்பதன் மூலம்தான் தன் வாழ்விற்கான அர்த்தத்தை மனிதன் உருவாக்கிக்கொள்ள முடியும் என்று இருத்தலியம் கூறுகிறது. குறிப்பாக, ழான் – பவுல் சார்த்தர் எனும் இருத்தலிய அறிஞர் இந்தச்

சுதந்திரத் தேர்ந்தெடுத்தல் பற்றி விரிவாகத் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார். “நாம் அசலானவர்களாக இருக்கவேண்டுமானால், தேர்வு செய்யும் செயலை உள்ளடக்கிய சுதந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். தேர்வைக் கொண்டுதான் நமக்கு நாம் ஓர் அர்த்தத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்” (சார்த்தர் விடுதலையின் பாதைகள், பக். 31) என்ற சுதந்திரம் குறித்தான சார்த்தரின் கருத்துகளை எஸ்.வி. ராஜதுரை விளக்குகிறார்.

சுதந்திரப்போராட்ட காலகட்டத்தில் மாணவர்கள், பொதுமக்கள் அனைவரையும் ‘பாரத மாதவுக்கு ஜே’, ‘மகாத்மா காந்திக்கு ஜே’ என முழங்கும்படி கட்டாயப்படுத்துகின்றனர். அப்போது, ஒரு கிழவியை அந்த மாணவர்கள் வற்புறுத்தும் நிலையில் அந்தக் கிழவி, “கொன்றாலும் கத்தமாட்டேன் என்றாள். கொள்கை காரணம் என்று நான் நினைக்கவில்லை. வற்புறுத்தலுக்கு இணங்கக்கூடாது என்ற வீம்பு அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. இந்த மனோபாவம் தான் சுதந்திரத்தை எப்போதும் காப்பாற்றி வந்திருக்கிறது.”(ஜே.ஜே: சில குறிப்புகள், பக்.166) என ஜே.ஜே. தனது நாட்குறிப்புகளில் எழுதியிருப்பது, இருத்தலியம் கூறும் சுதந்திரத் தேர்ந்தெடுத்தலாக இருக்கிறது.

சம்ஸ்காராவிலுள்ள நாராணப்பாவின் தேர்வுகள் அனைத்தும் மற்றவர்களின் முன்முடிவுகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளாமல், அவனே விருப்பத்துடன் மேற்கொண்ட சுதந்திரத் தேர்வுகளாகவே இருக்கின்றன. “நமது முடிவின் மூலம் நம்மை நாமே உருவாக்கிக்கொள்ளுகிறோம். இந்த உடலுக்கு ஒரு தனித்துவத்தின் உருவத்தையும் கொண்டு வருகிறோம். எப்படியாக வேண்டுமென்று நாராணப்பா முடிவெடுத்து வாழ்ந்தானோ அத்தகைய மனிதனாகவே அவன் ஆனான்.” (சம்ஸ்காரா, பக். 111) என்று பிராணேஸாசாரியார் தெரிவிப்பதன் மூலம் நாராணப்பாவின் சுதந்திரத் தேர்வுகளே அவனது வாழ்விற்கான அர்த்தத்தைக் கொடுத்திருக்கின்றன என்பதை அறியமுடிகிறது.

### பொறுப்புணர்வு

தனது தேர்வுகளின் மூலம் ஏற்படும் விளைவுகள் எல்லாவற்றிற்கும் தானே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தனது தேர்வுக்கான விளைவு சாதகமாக இருப்பின், அதற்கான காரணம் தான் என்று பொறுப்பேற்றுக்கொள்ளும் மனிதன், பாதகமாக இருப்பின் அதையும் தானே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று சார்த்தர் முதலிய இருத்தலியலாளர்கள் கூறுகின்றனர்.

நாராணப்பா இறந்த பிறகு அவனது சடலத்தை அடக்கம் செய்யும் நடைமுறைகள் தெரியாமல் குழம்பிப்போய் இருந்த பிராணேஸாசாரியார், நாராணப்பாவை அடக்கம் செய்வதற்குத் தன்னையே நம்பியிருந்த சந்திரியுடன் புணர்ச்சியில் ஈடுபடுகிறார். இதனைத் தொடர்ந்து, “அன்று நான் அவளைக் கூடிப் புணர்ந்ததற்கு நானே முழுப்பொறுப்பாளி அல்ல. அதாவது,

அந்த நொடிப்பொழுதுக்கு நான் பொறுப்பாக மாட்டேன். ஆனால், அந்த வேளை என்னை முழுமையாக மாற்றி விட்டிருக்கிறதே. அது ஏன்? மாறிவிட்ட ஒருவனுக்கு நானே பொறுப்பு என்பதுதானே இப்போதைய குழப்பம்" (சம்ஸ்காரா,பக்.110) என்ற பிராணேஸாசாரியாரின் மனநிலை, தான் சந்திரியோடு கூடியிருந்தது எதிர்பாராவிதமாக தன் முன்னெடுப்பின்றி நடந்ததாக இருந்தாலும், தான் நினைத்திருந்தால் மறுத்திருக்க முடியும். ஆதலால், அதற்கான விளைவுகள் அனைத்திற்கும் தானே பொறுப்பு என அவர் எண்ணுவது இருத்தலியம் கூறும் தன்னிலைத் தேர்வின் முழுப்பொறுப்பும் தன்னுடையதே என்பதாக வெளிப்படுகிறது.

**முடிவெடுத்தலில் சிரமம்**

தனிமனிதனுக்குத் தேர்ந்தெடுக்க எவ்வளவு சுதந்திரம் இருக்கிறதோ அதை விட அதிகமாகத் தேர்ந்தெடுப்பதில் தயக்கமும், பதற்றமும், பயமும் உள்ளன. எந்த முன்னறிவும், துணையும் இல்லாமல் தேர்ந்தெடுக்க வேண்டியிருப்பதாலும், தனது தேர்ந்தெடுத்தலின் விளைவாக வரும் நன்மை, தீமை தன்னையே பாதிக்கும் என்பதாலும்; தான் தேர்ந்தெடுக்கும் ஒன்று சரியானதா இல்லையா, ஒருவேளை தவறாகிவிட்டால் அதனால் ஏற்படக்கூடிய விளைவைத் தன்னால் தாங்கிக்கொள்ள முடியுமா? போன்ற பல்வேறு காரணங்களால் முடிவெடுக்க முடியாமல் போகின்றது. இதன் விளைவாக சிலர் முடிவெடுப்பதேயில்லை. தேர்ந்தெடுக்காமலிருப்பதும் ஒரு தேர்வுதான் என்றாலும், அதனைச் சுதந்திரமாகத் தானே தேர்ந்தெடுத்ததாக இருக்கவேண்டும். ஆனால், அது பயத்தினாலோ அல்லது பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் செயலாகவோ இருக்கக்கூடாது.

"முடிவெடுத்தால் உறுதியான முழுமையான முடிவாக இருக்க வேண்டும். இரண்டையும் விடமுடியாமல் இரண்டிலுமில்லாமல் இருக்கும் நிலை வேண்டாம். ஒட்டிக்கொள்வதானால் முழுமையாக ஒட்டிக்கொண்டுவிடு; விடுவதானால் முழுமையாக விட்டுவிடு. அதுதான் போராட்டத்திலிருந்து மீளும் வழி; பயத்திலிருந்து தப்பும் வழி" (சம்ஸ்காரா, பக்.132-133) சந்திரியுடன் சேர்ந்து வாழவேண்டும் என நினைக்கும் பிராணேஸாசாரியார், அப்படி நான் அவளோடு வாழ்வதானால், நான் யாரென்று அனைவருக்கும் தெரிந்துவிடுமே என்கிற பயமே அவரை முடிவெடுக்கவிடாமல் தடுக்கிறது. இவ்வாறு தனக்குத்தானே சொல்லிக்கொள்வதன் மூலம், பிராணேஸாசாரியார் சந்திரியுடன் கூடிவாழும் முடிவையும் எடுக்கமுடியாமல்; வாழவேண்டாம் என்ற முடிவையும் எடுக்கமுடியாமல் பயமும் பதற்றமும் அடைவது, முடிவெடுத்தலில் உள்ள சிரமத்தைக் காட்டுகிறது.

பிராணேஸாசாரியாரைப் போலவே, ஜே.ஜே-வும் மனதளவில் மிகவும் துயரமடைபவனாக விளங்குகிறான். ஜே.ஜே தனது நாட்குறிப்பில் "முடிவுகளுக்கு வருவது மகா கஷ்டமாக இருக்கிறது. எளிய முடிவுகளுக்கு வருவது கூட" (ஜே. ஜே: சில குறிப்புகள், பக்.156) என்றும்,

அரவிந்தாட்ச மேனனிடம் "நான் என்ன செய்ய வேண்டும்? நான் ஒரு காரியத்தை மன ஒப்புதலோடு ஆற்ற வேண்டும். அல்லது நான் இறந்துபோய்விட வேண்டும். இரண்டும் எனக்குச் சாத்தியமில்லை. இது தான் பிரச்சனை" (மேலது, பக்.95) எனவும் கூறுவது முடிவுகளை எடுப்பதிலுள்ள சிரமங்களைக் காட்டுகிறது.

இவ்வாறு, பிராணேஸாசாரியாரும், ஜே.ஜே-வும் முடிவுகளை எடுப்பதில் மிகுந்த சிரமடைவதற்குக் காரணம், இருவருமே விளைவுகளை முன்னிறுத்தி முடிவுகளை எடுக்க நினைப்பதேயாகும்.

**போலிச் சுதந்திரம்**

தனக்குத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் இருந்தும் எந்த ஒரு தேர்வும் செய்யாமல், ஏற்கெனவே நிலைபெற்றுள்ள அறநெறிகளின் பகுதிகளாகிய ஒழுக்கம், மரபு, விதிமுறைகள், சட்டம் முதலானவற்றைப் பின்பற்றிக்கொண்டு, தான் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதாக தானே கருதிக்கொள்வது போலிச் சுதந்திரமாகும்.

சார்த்தர், இந்தப் போலிச் சுதந்திர மனநிலையில் தனக்காக இருக்கக்கூடிய மனிதன், தானாக இருக்கக்கூடிய பொருளாக மாறிக்கொள்கிறான் என்கிறார். மனிதன், கடந்துபோகின்ற உணர்ச்சிகள் நிறைந்தவன். அவன் எப்போதோ, எவராலோ உருவாக்கப்பட்ட போலியானச் சுதந்திர வழிமுறைகளைப் பின்பற்றும்போது நிலைமாறாப் பொருளாக மாறிவிடுகிறான்.

சந்திரியுடன் புணர்ச்சியில் ஈடுபடும் வரை பிராணேஸாசாரியார் இந்தப் போலிச் சுதந்திர மனநிலையிலேயேதான் இருக்கிறார். பிராணேஸாசாரியார் இருத்தலியம் சொல்லும் நிகழ்காலத்தில் வாழாமல், மரணத்திற்குப் பிந்தையதான வாழ்வில் அக்கறைக்கொண்டு பிராமண நியதிகளைப் பின்பற்றுவதும், போதிப்பதும் புண்ணியம் சேர்க்கும் என்ற மனநிலையில் தானாக இருக்கும் பொருளாக மாறியிருக்கிறான். ஆனால், ஜே.ஜே-வோ இது போன்ற போலிச் சுதந்திர மனநிலைக்கு முற்றிலும் எதிரானவனாக இருக்கிறான். இதற்குக் காரணம், அவன் முழு இருத்தலியல்வாதியாக இருப்பதுதான். பிராணேஸாசாரியாரோ, சந்திரியுடன் எதிர்பாராதவாறு ஏற்பட்ட புணர்ச்சியின் காரணமாகவே இருத்தலியல் மனநிலைக்கு ஆளானவன்.

**மற்றவர்கள்தான் நரகம்**

மனிதனுக்குச் சகமனிதன்தான் நரகம். தான் நினைத்தவற்றைச் சுதந்திரமாகச் செய்வதைத் தடுப்பது சகமனிதனின் இருப்புதான் என்கிறார் சார்த்தர். தன்னுடைய 'மீளமுடியமா?' எனும் நாடகத்திலும் இந்தக் கருத்தையே முன்வைக்கிறார். வெட்கம், பயம், தயக்கம், சங்கடம், தாழ்வு மனப்பான்மை முதலிய நிலைப்பாடுகளுக்குக் காரணம், மற்றவர்கள் தன்னைப் பற்றி எவ்வாறு

நினைப்பார்களோ என்ற மனநிலைதான். தன்னுடைய குறிப்பிட்ட ஒரு செயலால் மற்றவர்கள், தன்னைப்பற்றித் தவறாக நினைக்கக்கூடுமோ என்ற உணர்வே, 'மற்றவர் பார்வையில் நான்' என்ற நிலைப்பாட்டிற்குத் தன்னைத் தள்ளிவிடுகின்றது.

ஜே.ஜே-வைச் சந்திக்க மிகவும் ஆவலோடு இருந்த பாலு, ஜே.ஜே தன் வீட்டிற்கு மிக அருகிலேயே இருந்தபோதும் அவரைச் சந்திக்கச்செல்ல மறுக்கிறான். அதற்குக் காரணம், ஜே.ஜே-வுடன் தனது அண்டை வீட்டுக்காரரும் இருப்பதுதான். "நான் கொஞ்சம் சங்கோஜி. இரண்டு பேர் இருக்குமிடத்தில் மூன்றாவது ஆளாகப் போய்ச்சேர மனம் சுருங்குகிறவன்"(ஜே.ஜே: சில குறிப்புகள், பக். 56) என்று பாலு கூறுவதற்கான காரணம், அங்கிருக்கும் மூன்றாம் நபரும், ஜே.ஜே-வும் தன்னைப்பற்றி என்ன நினைத்துக்கொள்வார்களோ என்றும் மற்றவர் பிரக்ஞையில் நாம் எப்படி இருப்போமோ என்கிற பயமும்தான். "தனது துக்கத்தை வெளியே சொல்ல விரும்பியும் பலசமயம் சொல்ல முடியாமல் வெட்க உணர்வால் தடுக்கப்பட்டு அவமானம் கவிந்துவிடுமோ என அஞ்சி, தனது படிமம் சிதறிவிடுமோ எனக் கவலைப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கிறான் மனிதன்." (மேலது, பக். 197) என்று தனது நாட்குறிப்புகளில் ஜே.ஜே எழுதியிருப்பதும் இதன் வெளிப்பாடாகத்தான்.

பிராணேஸாசாரியார் தனது பயணத்தின்போது கௌடனின் வாயிலாகத் தான் இருக்கும் இடத்தில், தன்னை நன்கு அறிந்த பால்கார சேஷப்பனும் இருப்பதை அறிந்துக்கொண்டபிறகு "பிராணேஸாசாரியாருக்கு அங்கே முள்ளின்மீது உட்கார்ந்திருப்பதைப் போலிருந்தது. சேஷப்பனின் கண்ணில் தான் பட்டுவிட்டால்? சுற்றுமுற்றும் பார்த்து பயத்தில் நடுங்கி விரைத்துப்போய் உட்கார்ந்தார். எல்லாம் துறந்து வந்துவிட்ட எனக்கு ஏன் இந்த பயம் ஏற்பட்டது என்று கலங்கிப் போனவராக பெருகிவந்த அச்சத்தைக் களைந்தெறிய முடியாமல் தவித்துப்போனார்" (சம்ஸ்காரா, பக். 108) இவ்வாறு மற்றவர்கள் தன்னை அறிந்துவிடக்கூடாது; ஒருவேளை, அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் அவர்கள் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்கின்ற அச்சம் பிராணேஸாசாரியரை மிகவும் பாதிக்கிறது.

"எல்லாம் தெரிந்து போய் விடுமோ என்ற பயம். யார் கண்ணிற்கும் படாமல் எதையும் ரகசியமாக வைத்துக்கொள்ள என்னால் இயலாது என்ற பயம். முன்பிருந்த என்னுடைய, எதற்கும் அஞ்சாத தன்மையை இழந்துவிட்டேன். எப்படி? ஏன்? நான் அக்ரஹாரத்திற்குத் திரும்பாமல் இருப்பதற்கு முக்கிய காரணம், அந்த பிராமணர்களின் கண்களுக்கு முன்னால் வாழமுடியாத பெரும்பயம்!" (மேலது, பக்.109) இவ்வாறு பிராணேஸாசாரியார் தனக்குள் எண்ணிக்கொள்வதன் மூலம் மற்றவர்கள்தான் நரகம் எனும் கருத்தாக்கம் அவரது எண்ணவோட்டத்தில் பிரதிபலிப்பது புலனாகிறது.

ஜே.ஜே-வையும் பாலுவையும்விட 'மற்றவர் பார்வையில் நான்' என்னும் "மற்றவர்கள்தான் நரகம்" என்கின்றகூறு சம்ஸ்காராவின் பிராணேஸாசாரியார் மூலமாகத்தான் அதிகமாக வெளிப்படுகிறது. அவர் தூர்வாசபுரத்திலிருந்து வெளியேறியதற்கும் மீண்டும் திரும்பி வந்ததற்கும் காரணம் தன்னையறிந்தவர்கள் பார்வையில் நான் எப்படிப்பட்டவனாகச் சித்தரிக்கப்படுவேன் என்பது பற்றிய பயம்தான்.

**கடவுள் மறுப்பு**

இருத்தலியத்தில் கடவுளை ஏற்றுக்கொள்ளும் ஆத்திக இருத்தலியல், கடவுளை மறுக்கும் நாத்திக இருத்தலியல் என இரண்டு பிரிவுகள் உள்ளன. அவற்றில் ஜே.ஜே-வும், நாராணப்பாவும் கடவுளை மறுக்கும் நாத்திகவாதிகளாக இருக்கின்றனர்.

"வாழ்க்கையில் பிடிப்பு என்பதே இல்லை. எதை நம்பி உயிர் வாழ? கடவுள் சரிந்துவிட்டார். சமயங்கள் சரிந்து விட்டன. ஆலயங்கள் அழுகி முடை நாற்றம் எடுத்துக் கொண்டிருக்கின்றன"(ஜே.ஜே: சில குறிப்புகள், பக். 174), "இப்போது இட்டுச்செல்ல, கடவுளும் இல்லை. பயணம் தொடர, முடிவு எடுக்கவும் முடியவில்லை" (மேலது, பக். 195 )

ஜே.ஜே-வின் மேற்கண்ட இந்த நாட்குறிப்புப் பகுதிகள் நீட்சேவின் கடவுள் இறந்துவிட்டார் என்ற கருத்தை ஒத்ததாக இருக்கிறது. நீட்சே கடவுள் இறந்துவிட்டார், நாம் சுதந்திரமானவர்கள், நம்மைக் கட்டுப்படுத்த எவரும் எதுவும் இல்லை என்கிறார். ஜே.ஜே-வோ நம்மைக் காப்பற்ற யாருமே இல்லையே என்கிறார். நீட்சேவுக்கும் ஜே.ஜே-வுக்கும் உள்ள வேறுபாடு, நீட்சே கடவுள் இல்லையென மகிழ்கிறார்; ஜே.ஜே நம்மை வழிநடத்த யாருமில்லையே என வருந்துகிறான்.

சம்ஸ்காராவின் நாராணப்பா கடவுள் மறுப்பாளனாகவே காட்டப்படுகிறான். பிராமணர்கள் வழிபடும் சாளக்கிராம கல்லைத் தண்ணீரில் தூக்கி எறிகிறான். அக்ரஹாரத்திலிருக்கும் பூக்கள் அனைத்தும் கடவுளுக்குப் போகும்போது, தனது வீட்டுப் பூக்களை மட்டும் சந்திரியின் மகிழ்விற்காக ஒதுக்குகிறான். கோயில் குளத்திலிருக்கும் மீனை இஸ்லாமியர்களோடு இணைந்து பிடிக்கிறான். கடவுள் மீது காறி உமிழ்கிறான். இவ்வாறு, பிராமணியத்தின் அனைத்து மரபுகளையும் மீறிய ஒரு நாத்திகவாதியாகவே நாராணப்பா விளங்குகிறான் .

**எல்லைக்கோட்டுநிலை**

மனிதன் தன் வாழ்க்கையில் மரணம், நோய், குற்றவுணர்வு போன்ற தவிர்க்கமுடியாத நிலையினை அடையும்போதுதான் தன்னுடைய இருப்பின் உண்மையான அர்த்தத்தினை உணர்கிறான் என்ற எல்லைக்கோட்டுநிலை கருத்தினைக் கார்ல் ஜாஸ்பர் முன்வைக்கிறார்.

ஜே.ஜே தனது மரணத்தை உணர்ந்த நிலையில், தன் வாழ்வின் அர்த்தமாக அவன் நினைக்கும் எழுத்துப் பணியைத் தீவிரமாகச் செய்தது எல்லைக்கோட்டுநிலையின் தாக்கமாகும்.

"முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற உள்ளுணர்வு அவனுக்கு இருந்ததாகவும் அதிலிருந்து பெரும் ஆவேசமும் அவசரமும் பெற்றான் என்றும் சொல்கிறார்கள். இருக்கலாம். 'மரணத்தின் குகைவாயில் மனக் கண்ணுக்குத் தெரியும்போது எழுத்தில் ஒளி ஊடுருவுகிறது' .................. மரணம்தான் சகல உன்னதங்களுக்கும் காரணம்" (ஜே.ஜே: சில குறிப்புகள், பக்.40) இவை, ஜே.ஜே மரணம் என்ற எல்லைநிலையினை உணர்ந்தவன் என்பதை வெளிப்படுத்துகிறது.

'தன்னை நம்பியிருந்த அக்ரஹாரத்து மக்களை நான் ஏமாற்றிவிட்டேன்' என்ற பிராணேஸாசாரியாரின் குற்றவுணர்வு, அவரைத் தொடந்து துயரத்திற்கு உட்படுத்தியதன் விளைவாக அக்ரஹாரத்தினரிடம் எல்லா உண்மைகளையும் கூறிவிட்டு, யாருக்கும் பயப்படாமல் சந்திரியுடன் சேர்ந்து வாழவேண்டும் என்கிற முடிவுக்குவர காரணமாக அமைகிறது.

நாராணப்பா கடவுளை மறுக்கும் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும், மரணத்தருவாயில் தன்னுடைய கடைசி நொடிகளில், "ஒரு நாள்கூட எந்தக் கடவுளையும் வணங்காத நாராணப்பா, காய்ச்சல் நெற்றிக்கு ஏறியதுமே எப்படிப் புலம்பத் தொடங்கிவிட்டான்! நினைவு தப்பும்வரை 'அம்மா, பகவானே ராமச்சந்திரா, நாராயணா' என்று சொல்லிக் கொண்டிருந்தான்! 'ராமா ராமா' என்று கத்தினான். பாவியின் வாயிலிருந்து, சண்டாளனின் வாயிலிருந்து, வரும் சொற்கள் அல்ல அவை." (சம்ஸ்காரா, பக். 53) என்ற சந்திரியின் கூற்று, நாராணப்பா தனது மரணத்தினை உணர்ந்து, தேர்ந்தெடுத்தலுக்கு எந்த சாத்தியப்பாடுகளும் இல்லை என்றுணர்ந்த நிலையில், கடவுளை நம்பியது எல்லைக்கோட்டுநிலையின் தாக்கத்தைக் காட்டுகிறது.

**முடிவுரை**

தமிழ், கன்னட மொழிகளில் நவீனத்துவத்தின் முக்கிய அடையாளங்களாக விளங்கிய சுந்தர ராமசாமி, யு.ஆர். அனந்தமூர்த்தி ஆகியோரால் படைக்கப்பெற்றுள்ள முறையே ஜே. ஜே: சில குறிப்புகள், சம்ஸ்காரா ஆகியவற்றில் மரபுகளை உடைத்தல் என்ற கூறு ஆழமாக வெளிப்படுகிறது. ஜே.ஜே-வும், நாராணப்பாவும் முழு இருத்தலியல் மனநிலைகொண்ட இருத்தலியவாதிகள் ஆவர். இவ்விரு நாவல்களிலும் தனிமனித முக்கியத்தும், முடிவெடுத்தலில் சுதந்திரம், முடிவெடுத்தலில் சிரமம், போலிச் சுதந்திரம், மற்றவர்கள்தான் நரகம், கடவுள் மறுப்பு, எல்லைக்கோட்டுநிலை ஆகிய இருத்தலியல் கூறுகள் இடம்பெற்றுள்ளன. மேலும், இக்கூறுகள் இரு நாவல்களிலும் பொதுவானவைகளாகவும் உள்ளன. இவை தமிழ் மற்றும் கன்னட நவீனத்துவ நாவல்களில் இருத்தலியத்தின் செல்வாக்கை உணர்த்துகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. அனந்தமூர்த்தி. யு. ஆர், மொழிபெயர்ப்பு: டி.எஸ். சதாசிவம், சம்ஸ்காரா, அடையாளம் பதிப்பகம், 2021.
2. ஆல்பெர் காம்யு, மொழிபெயர்ப்பு: வெ. ஸ்ரீராம், அந்நியன், க்ரியா, 2023.
3. சஜன். அ, நவீனத்துவம் சுந்தர ராமசாமியை முன்வைத்து, காலசகம் பதிப்பகம், 2006.
4. சீமானம்பலம். மு, தமிழ்ப் புதினங்களில் இருத்தலியல், தி பார்க்கர், 2006.
5. சுந்தர ராமசாமி, ஜே.ஜே: சில குறிப்புகள், காலச்சுவடு பதிப்பகம், 2025.
6. நீட்சே, மொழிபெயர்ப்பு: ரவி, ஜரதுஷ்ட்ரா இவ்வாறு கூறினான், காலச்சுவடு பதிப்பகம், 2006.
7. முரளி. இரா, இருத்தலியம் ஓர் அறிமுகம், பரிசல் புத்தக நிலையம், 2025.
8. ராஜதுரை. எஸ். வி, சார்த்தர் விடுதலையின் பாதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2014.
9. வேதசகாயகுமார். எம், இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம், அடையாளம், 2021.
10. ழான்-போல் சார்த்ர், மொழிபெயர்ப்பு: வெ. ஸ்ரீராம், மீள முடியுமா?, க்ரியா, 2013.
11. ஜெயமோகன், நவீனத்துவத்தின் முகங்கள், விஷ்ணுபுரம் பதிப்பகம், 2025.